International Federation of Library Associations and Institutions

unesco
Information for All Programme

# ஐ எஃப் எல் ஏ – யுனெஸ்கோ பொது நூலக அறிக்கை 2022

சுதந்திரம், செழுமை, சமூக மற்றும் தனிமனித வளர்ச்சி ஆகியவை அடிப்படை மனித விழுமியங்கள். அறிவார்ந்த குடிமக்கள் தங்களின் ஜனநாயக உரிமைகளை பயன்படுத்துதல் மற்றும் சமூகத்தில் உயிர்ப்புடன் பங்காற்றுதல் மூலம் இவ்விழுமியங்களை அடைய முடியும். ஆக்கப்பூர்வமான பங்கேற்பு மற்றும் ஜனநாயகத்தின் வளர்ச்சி என்பது, திருப்திகரமான கல்வி, அறிவு, சிந்தனை, கலாச்சாரம், தகவல் ஆகியவற்றை இலவச மற்றும் வரம்பற்ற முறையில் அணுகுதலை சார்ந்து உள்ளது.

பொது நூலகங்கள் அறிவின் எளிய நுழைவு வாயில், இவை வாழ்நாள் முழுவதும் கற்பதற்கான சூழலையும், சுயமாக சிந்திக்கும் திறனையும், சமூக மற்றும் தனி மனிதர்களின் கலாச்சார வளர்ச்சியிலும் பங்காற்றுகிறது. அறிவியல் பூர்வமான மற்றும் அறிவுப்பூர்வமான தகவல்களை எவ்வித வணிக, தொழில்நுட்ப மற்றும் சட்ட தடைகளின்றி வழங்குதல் மற்றும் அறிவுப்பூர்வமான தகவல்களுக்கான அணுகுதலை வழங்குதல், உருவாக்குதல் மற்றும் பகிர்தல் மூலமாக ஆரோக்கியமான மற்றும் அறிவார்ந்த சமூகத்தை கட்டமைப்பதற்கு வழிவகைச் செய்கிறது.

உலகின் அத்தனை நாடுகளிலும், குறிப்பாக வளரும் நாடுகளில், நூலகங்கள் எண்ணற்ற மக்களுக்கு கல்வி கற்பதற்கான உரிமையை நிலைநாட்டுவதுடன், அறிவுசார் சமூகத்தில் பங்கேற்றலையும், கலாச்சார வாழ்வியல் மேம்பாட்டையும் உறுதிப்படுத்த உதவுகிறது.

கல்வி, கலாச்சாரம், சமூக உள்ளடக்கம் மற்றும் தகவல் ஆகியவற்றின் உயிர் சக்தியாகவும், நிலையான வளர்ச்சியின் அடிப்படை முகவராகவும், தனிமனித மனங்களில் அமைதி மற்றும் நிறைவை கொண்டு செல்லும் அமைப்பாகவும் பொது நூலகங்கள் திகழும் என்ற யுனெஸ்கோவின் நம்பிக்கையை இவ்வறிக்கை பிரகடனம் செய்கிறது.

எனவே, தேசிய மற்றும் உள்ளாட்சி அளவிலான அரசுகள் பொது நூலகங்களின் வளர்ச்சியில் முனைப்புடன் பங்கேற்றல் மற்றும் ஆதரித்தலை – யுனெஸ்கோ ஊக்குவிக்கிறது.

# பொது நூலகம்

பொது நூலகம் என்பது, அதன் அமைவிடம் சார்ந்த முதற்கட்ட தகவல் மையம். இது தனது பயனர்களுக்கு தகவல் மற்றும் அறிவுசார் வளங்கள் மற்றும் சேவைகள் உடனடியாக கிடைக்க வழிவகை செய்கிறது. இது அறிவார்ந்த சமூகங்களின் இன்றியமையாத அங்கமாக, தொடர்ந்து புதிய தகவல் தொடர்பு வழிமுறைகளை தழுவி, தனது பயனர்களின் தேவையை பூர்த்தி செய்வதுடன், தகவல்களுக்கான உலகளாவிய அணுகலை வழங்கி அர்த்தமுள்ள பயன்பாட்டை அனைத்து மக்களுக்கும் கொண்டு செல்கிறது. அறிவு உருவாக்கம், பகிர்தல் மற்றும் தகவல் பரிமாற்றம் மேலும், குடிமக்களின் ஈடுபாட்டை ஊக்குவித்தல் போன்றவற்றிற்கு ஒரு பொதுவான தளத்தை இது வழங்குகிறது.

நூலகங்கள் சமூகத்தை கட்டமைப்பவை, இவை முனைப்புடன் புதிய பயனாளர்களை சென்றடைவதுடன், உள்ளூர் அளவிலான தேவைகளுக்கு இசைந்து அந்த மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தக்கூடிய சேவைகளின் வடிவமைப்பை ஆதரிக்கிறது. பொது நூலகங்கள் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை பூர்த்தி செய்ய, பொது நூலகங்கள் தங்களின் சமூகத்தை தகவல் மற்றும் விழிப்புடன் வைத்திருப்பதை லட்சியமாகக் கொள்ள வேண்டும்.

பொது நூலகத்தின் சேவைகள், வயது, பாலினம், மதம், இனம், தேசியம், மொழி, சமூக நிலை மற்றும் பிற பண்புகளை பொருட்படுத்தாமல் அனைவருக்கும் அணுகலை, சமத்துவத்தின் அடிப்படையில் வழங்குகிறது. குறிப்பிட்ட மற்றும் வழக்கமான சேவைகள் மற்றும் வளங்கள் எக்காரணத்தைக் கொண்டும் அதனை பயன்படுத்த இயலாத பயனாளர்களுக்கு எடுத்துக்காட்டாக, மொழியியல் சிறுபான்மையினர், மாற்றுத்திறனாளிகள், கணினித்திறன் குறைந்தோர், கல்வி அறிவு குறைந்தோர், மேலும், மருத்துவமனை அல்லது சிறையில் இருப்பவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

பொது நூலகமானது அனைத்து வயதினரின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் அமைந்திருக்க வேண்டும். நூலக வளங்கள் மற்றும் சேவைகள், அனைத்து வகையான பொருத்தமுடைய ஊடக மற்றும் நவீன தொழில்நுட்பங்களை கொண்டிருப்பதோடு புராதன வளங்களையும் கொண்டிருக்க வேண்டும். மேலும், உயர்தரம், உள்ளூர் சூழல் மற்றும் தேவைகள், சமூகத்தின் மொழி மற்றும் கலாச்சார பன்முகத்தன்மையை பிரதிபலித்தல் ஆகியவை அடிப்படையாகும். வளங்கள் அனைத்தும் தற்காலப் போக்கு மற்றும் சமூகத்தின் பரிணாமத்தை பிரதிபலிப்பாகவும், அதனுடன் மனித முயற்சிகள் மற்றும் கற்பனையின் நினைவாகவும் இருக்க வேண்டும்.

வளங்கள் மற்றும் சேவைகள் எவ்வித கருத்தியல், அரசியல், மத தணிக்கை மற்றும் வணிக ரீதியான அழுத்தம் போன்றவற்றிற்கு உட்பட்டிருக்கக் கூடாது.

# பொது நூலகத்தின் பணிகள்

பொது நூலகத்தின் சேவைகளானது, தகவல், எழுத்தறிவு, கல்வி, சமூக உள்ளடக்கம், குடிமக்கள் பங்கேற்பு மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றை மையமாக கொண்டிருக்க

வேண்டும்.  இந்த முக்கிய பணிகளின் வழியே பொது நூலகங்கள், நிலையான வளர்ச்சி இலக்குகளை அடையவும் மற்றும் சமத்துவ, மனிதாபிமான மற்றும் நிலையான சமூகத்தை கட்டமைக்கவும் பங்காற்றுகிறது.

- தணிக்கையற்ற, பரந்த அளவிலான தகவல் மற்றும் சிந்தனைகளுக்கு அணுகலை வழங்குதல், வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் உள்ள மக்கள் தன்னார்வ மற்றும் சுயமான முறையில் கல்வி கற்றலை ஆதரித்தல், வாழ்நாள் முழுவதும் கற்றல், முறைசார்/முறைசாரா கல்வியை ஆதரித்தல்;
- தனிமனித படைப்பாற்றல் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்குதல், மேலும், கற்பனை, படைப்பாற்றல், ஆர்வம் மற்றும் மனிதநேயம் ஆகியவற்றை தூண்டுதல்;
- சிறுவயது முதல் முதிர் பருவம் வரை குழந்தைகளில் வாசிப்பு பழக்கத்தை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்துதல்;
- வாசிப்பு மற்றும் எழுதுதல் போன்ற கல்வியறிவு சார்ந்த திறன் வளர்ப்பு நிகழ்வுகளை நடத்துதல், பங்கேற்கச் செய்தல் மேலும் ஆதரித்தல் மற்றும் தகவலறிந்த ஜனநாயக சமூகத்தை உருவாக்கும் உணர்வில் அனைத்து வயதினரிடத்தும் ஊடக, தகவல் மற்றும் எண்முறை (டிஜிட்டல்) கல்வியறிவு திறன்களை மேம்படுத்துதல்;
- டிஜிட்டல் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி அவர்களின் சமூகத்திற்கு, முடிந்த வரையிலான தகவல்கள், வளங்கள் மற்றும் நிகழ்வுகளுக்கான அணுகலை நேரிலும், தொலைவிலும் வழங்குதல்;
- சமூக கட்டமைப்பின் மையத்தில் நூலகத்தின் பங்கை அங்கீகரிக்கும் விதமாக, அனைத்து வகையான சமூக தகவல்களையும், சமூக ஒருங்கிணைப்பிற்கான வாய்ப்புகளையும் மக்கள் அனைவரும் அனுகுவதை உறுதி செய்தல்;
- பயனர்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் ஆரோக்கிய தகவல்கள் போன்ற அறிவியல் அறிவுக்கான அணுகலை அச்சமூகத்திற்கு வழங்குதல் மட்டுமின்றி அவர்களை விஞ்ஞான முன்னேற்றத்தில் பங்கேற்க செய்தல்;
- உள்ளூர் நிறுவனங்கள், சமூகங்கள் மற்றும் ஆர்வமுள்ள குழுக்களுக்கு போதுமான தகவல் சேவைகளை வழங்குதல்;
- உள்ளூர் மற்றும் பூர்வீக, தரவு, அறிவு மற்றும் பாரம்பரியத்தை (வாய் வழி உட்பட) பாதுகாத்தல் மற்றும் அணுகலை வழங்குதல், சமூகத்தின் விருப்பத்திற்கேற்ப கைப்பற்ற, பாதுகாக்க மற்றும் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய வளங்கள் அனைத்தையும் உள்ளூர் சமூகமே அடையாளம் காண்பதற்கான சூழலை உருவாக்குதல் ;
- கலாச்சாரங்களுக்கு இடையேயான உரையாடலை வளர்ப்பது மற்றும் கலாச்சார பன்முகத்தன்மைக்கு ஆதரவளித்தல்;
- கலாச்சார வெளிப்பாடு, பாரம்பரியத்தை பாதுகாத்தல் மற்றும் அர்த்தமுள்ள பயன்பாட்டை ஊக்குவித்தல், கலைகளை வளர்த்தல், டிஜிட்டல் மயமாக்கப்பட்ட மற்றும் டிஜிட்டல் முறையில் உருவாக்கப்பட்ட அறிவியல் அறிவு, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான திறந்த அணுகலை வழங்குதல்.

# நிதி, சட்டம் மற்றும் அமைப்பு

பொது நூலக வளங்கள் மற்றும் சேவைகள் முற்றிலும் கட்டணம் இல்லாமல் வழங்கப்பட வேண்டும். உள்ளாட்சி மற்றும் தேசிய அளவிலான அரசுகளின் பொறுப்பில் பொது நூலகங்கள் இருக்க வேண்டும். சர்வதேச சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் போன்ற குறிப்பிட்ட, மேம்படுத்தப்பட்ட சட்டத்தால் ஆதரிக்கப்பட வேண்டும். இதற்கான நிதி, தேசிய மற்றும் உள்ளூர் அரசுகளால் வழங்கப்பட வேண்டும். கலாச்சாரம், தகவல் வழங்கல், கல்வி மற்றும் கல்வியறிவு ஆகியவற்றின் நீண்ட கால செயல்திட்டங்களில், பொது நூலகங்கள் முக்கிய பங்கு வைக்கிறது.

டிஜிட்டல் யுகத்தில், பதிப்புரிமை மற்றும் அறிவுசார் சொத்துரிமை சட்டங்கள், பௌதீக வளங்களை போலவே நியாயமான விதிமுறைகளில் டிஜிட்டல் வளங்களை பொது நூலகங்கள் வாங்குவதற்கும், அணுகுதலை வழங்குவதற்கும் அனுமதிக்க வேண்டும்.

தேசிய அளவிலான நூலக ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு, சட்டங்கள் மற்றும் செயல் திட்டங்கள் உருவாக்கம், மேலும், ஒப்புக்கொள்ளப்பட்ட சேவை வரையறைகளின் அடிப்படையில் தேசிய நூலக அமைப்பை உருவாக்குதல்.

பொது நூலக அமைப்பானது, தேசிய, வட்டார, ஆராய்ச்சி மற்றும் சிறப்பு நூலகங்கள் அத்துடன் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் உள்ள நூலகங்களையும் உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.

# செயல்பாடு மற்றும் மேலாண்மை

வட்டார, சமூகத்தேவைகள் தொடர்பான நோக்கங்கள், முன்னுரிமைகள் மற்றும் சேவைகளை வரையறுத்து தெளிவான கொள்கை வகுக்கப்பட வேண்டும். இந்த செயல் முறையில் வட்டார அறிவு மற்றும் சமூக பங்கேற்பின் முக்கியத்துவம் மதிப்பமிக்கது. மேலும் முடிவு எடுப்பதில் அவ்வட்டார சமூகங்கள் பங்கேற்க வேண்டும்.

பொது நூலகங்கள் திறம்பட ஒழுங்கமைக்கப்பட்டு, தொழில் முறை செயல்பாட்டுத்தரங்கள் பின்பற்றப்பட வேண்டும்.

சேவைகள், சமூகத்தின் அனைத்து பயனர்களுக்கும் பௌதீக அல்லது டிஜிட்டல் முறையில் அணுகக் கூடியதாக இருக்க வேண்டும். நூலக அமைவிடம், சிறந்த வாசிப்பு மற்றும் படிக்கும் வசதிகள் அத்துடன் தொடர்புடைய தொழில்நுட்பங்கள், பயனர்களுக்கு ஏதுவான நூலக செயல்படும் நேரம் போன்றவை இதனை சாத்தியப்படுத்தும். நூலகத்தை பயன்படுத்த இயலாதவர்களுக்கும், இச்சேவைகள் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும்.

கிராம மற்றும் நகர்புற சமூகங்கள், விளிம்பு நிலை மக்கள், பன்மொழி பயனாளர்கள் மற்றும் பழங்குடியினர் என அனைவரின் தேவைக்கேற்ப நூலக சேவைகள் இருக்க வேண்டும்.

நூலகர் என்பவர், டிஜிட்டல் மற்றும் புராதன வளங்களையும், பயனர்களையும் இணைக்கும் பாலம் ஆவார். நிறைவான மனித மற்றும் பொருள் வளங்கள் மற்றும் நூலகரின் தொடர்ச்சியான கல்வியானது, தற்கால மற்றும் எதிர்கால சவால்களை எதிர்கொள்ளவும், தேவையான சேவைகளை வழங்கவும் இன்றியமையாதது. வளங்களின் அளவு மற்றும் தரம் குறித்து நூலக வல்லுநர்களின் தலைமையில் ஆலோசனை மேற்கொள்ளப்பட வேண்டும்.

பயனாளர்கள், அனைத்து வளங்களிலிருந்தும் பயனைப்பெற முறையான கல்வி மற்றும் வழிகாட்டும் திட்டங்கள் வழங்கப்பட வேண்டும்.

தற்போதைய ஆராய்ச்சிகள், கொள்கை வகுப்போர்களுக்கு, நூலகங்களின் சமூக பலனை நிரூபிக்கும் வகையில், நூலகத்தின் தாக்கத்தை மதிப்பிடுவதிலும், தரவுகளை சேகரிப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும். சமூகத்தில் உள்ள நூலகங்களின் நன்மைகள் பல தலைமுறைகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதால், ஆராய்ச்சியின் புள்ளியியல் தரவுகள் நீண்ட காலத்திற்குரியதாக இருக்க வேண்டும்.

## கூட்டமைப்பு

நூலகங்கள், பரந்த மற்றும் பலதரப்பட்ட பயனாளர்களை அடைவதற்கு கூட்டமைப்புகளை உருவாக்குதல் அவசியம். எடுத்துக்காட்டாக, பயனர் குழுக்கள், பள்ளிகள், அரசு சாரா நிறுவனங்கள், நூலக சங்கங்கள், வணிக மற்றும் வட்டார, பிராந்திய, தேசிய மற்றும் சர்வதேச தொழில் வல்லுநர்கள் போன்றோருடனான ஒத்துழைப்பை உறுதி செய்ய வேண்டும்.

## அறிக்கையை நடைமுறைப்படுத்துதல்

ஊரக மற்றும் தேசிய அளவிலான ஆட்சியாளர்கள் மற்றும் உலகெங்கிலும் உள்ள நூலக சமூகம், இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கொள்கைகளை செயல்படுத்துவதற்கு, இதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது.

ஐ எஃப் எல் ஏ ஆட்சி குழுவால் அங்கீகரிக்கப்பட்டது

18 ஜூலை 2022